Deposition of Witness

(Chapter XXV BNSS )

IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE, VANIYAMBADI.

Case No. STC . No.702 /2019

DEPOSITION OF PROSECUTION SIDE WITNESS –4

| | | | |
|---|---|---|---|
| Name: | ராம்பாலாஜீ | Calling: | உதவி மருத்துவர் |
| Father's Name: | ராஜேந்திரன் | Religion: | |
| Village: | திருப்பத்தூர் | Age: | 38 |
| Taluk: | திருப்பத்தூர் | | |

Solemnly affirmed in accordance with the provisions of Chapter X of BSA 2023 Dated : 04.02.2026 நேரம் : 12.15 PM

( 1,2 ம் எதிரிகள் ஆஜர் இல்லை, குவிமுச 317 ன் படி மனுத்தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கபட்டது. 3 ம் எதிரி இறந்துவிட்டார் . )

அ.சா.4 முதன்மை விசாரணை.

நான் தற்போது ஆண்டியப்பனூர் அரசு மருத்துவமனையில் சீனியர் உதவி மருத்துவராக பணிப்புரிந்து வருகிறேன். 29.06.2017 அன்று வாணியம்பாடி அரசு மருத்துவமனையில் பணியில் இருந்த போது ராதா க/பெ அபிமன்னன், வெள்ளநாயக்கனனேரி, நாட்றம்பள்ளி என்பவர் மாலை 07.25 மணிக்கு அவருடைய கணவருடன் சிகிச்சைக்காக வந்தார். அவரை விசாரித்தபோது 23.06.2017 அன்று மாலை 04.00 மணியளவில் தெரிந்த ஒரு ஆண் மற்றும் இரண்டு பெண் நபர்களால் தாக்கப்பட்டதாக கூறினார், செருப்பு மற்றும் கை, கால்களால் அவரின் வீட்டின் அருகில் அவரை தாக்கியதாக கூறினார். அவரை சிகிச்சை செய்யும் போது அவருக்கு வெளிப்புறகாயங்கள் இல்லை, உடல் மற்றும் இடுப்பு பகுதியில் வலி இருப்பதாக சொன்னார். அவரை உள்நோயாளியாக சிகிச்சைக்கு சேர்த்தேன். அவரை பரிசோதித்து சொற்பகாயம் என சான்று வழங்கினேன். **ராதாவின் காயச்சான்றிதழ் அ.த.சா.ஆ 2 ஆக குறியீடு செய்யப்படுகிறது**. 30.06.2017 அன்று காலை

08.00 அவர் வாட்டில் இருந்து காணவில்லை. இது சம்மந்தமாக போலிசார் என்னை விசாரிக்கவில்லை.

எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை.

பொதுவாக ஒரு நபருக்கு வயது முதிர்வின் காரணமாகவோ சக்கரை வியாதி , இரத்த அழுத்தம் காரணமாகவோ உடல் வலி ஏற்பட வாய்ப்புள்ளதா என்றால் வாய்ப்பிருக்கலாம். தலையில் அடிபட்டு இருந்தால் தலையில் தான் வலியிருக்கும் என்றாலும் உடல் வலி, இடுப்பு வலி ஏற்படவாய்ப்பில்லை என்றாலும் சரியல்ல. அந்த வலிகள் எதனால் அவருக்கு ஏற்பட்டது என்று என்னால் குறிப்பிட்டு கூறமுடியுமா என்றால் அடித்ததால் ஏற்பட்டதாக கூறினார்.

மறுவிசாரணை இல்லை.

சாட்சி கையொப்பம்
(ஓம்.) ராம்பாலாஜீ

SRIPATHI K

Digitally signed by SRIPATHI K
Date: 2026.02.05 19:06:22 +0530

Deposition of Witness

(Chapter XXV BNSS )

IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE, VANIYAMBADI.

Case No. STC. No.702 /2019

DEPOSITION OF PROSECUTION SIDE WITNESS –5

| | | | |
|---|---|---|---|
| Name: | தேவராஜ் | Calling: | உதவி ஆய்வாளர் ஓய்வு |
| Father's Name: | திம்மராயன் | Religion: | |
| Village: | ஜோலார்பேட்டை | Age: | 64 |
| Taluk: | திருப்பத்தூர் | | |

Solemnly affirmed in accordance with the provisions of Chapter X of BSA 2023 Dated : 04.02.2026 நேரம் : 01.10 PM

( எதிரி ஆஜர். )

அ.சா.5 முதன்மை விசாரணை.

நான் கடந்த 31.11.2019 ம் தேதி கே.வி.குப்பம் காவல் நிலையத்தில் உதவி ஆய்வாளராக பணிப்புரிந்து ஓய்வு பெற்றேன். கடந்த 30.06.2017 ம் தேதி திம்மாம்பேட்டை காவல் நிலையத்தில் உதவி ஆய்வாளராக நிலைய ஆஜரில் இருந்த போது காலை சுமார் 11.00 மணிக்கு வாணியம்பாடி அரசு மருத்துவமனையில் இருந்து கிடைத்த இன்டிமேசனை பெற்று அங்கு உள்நோயாளியாக சிகிச்சையில் இருந்த ராதா என்பவரிடம் புகார் வாக்குமூலம் பதிவு செய்தேன். **அந்த புகார் வாக்குமூலம் ஏற்கனவே அ.த.சா.ஆ 1 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது.** அந்த புகார் வாக்குமூலத்தை பெற்று அதன் அதன் தன்மைகேற்ப திம்மாம்பேட்டை காவல் நிலைய குற்ற எண் 68/2017 சட்டப்பிரிவுகள் 294(b),355,323 IPC கீழ் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்தேன். **முதல் தகவல் அறிக்கை அ.த.சா.ஆ 3 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** புகார் மனுவின் அசலை முதல் தகவல் அறிக்கையுடன் இணைத்து நீதிமன்றத்திற்கு அனுப்பிக்கொண்டேன்.

பின்னர் நானே வழக்கை புலன் விசாரணைக்கு எடுத்து கொண்டு சம்பவயிடம் சென்று அதே தினம் மாலை 05.30 மணிக்கு சம்பவயிடத்தை பார்வையிட்டு சாட்சிகள் தசரதன், கோவிந்தசாமி ஆகியோர் முன்னிலையில் பார்வை மகசர், மாதிரி வரைபடம் தயார் செய்தேன். **பார்வை மகசர் மற்றும் மாதிரி வரைபடம் அ.த.சா.ஆ 4 மற்றும் அ.த.சா.ஆ 5 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**

பின்னர் அதே தினம் மாலை சுமார் 06.00 மணிக்கு அதே சாட்சிகள் முன்னிலையில் சம்பவயிடத்தில் எதிரி பயன்படுத்திய கருநீலகலர் லப்பர் செருப்பு (சைஸ் 9) ஒன்றினை சாட்சிகள் முன்னிலையில் கைப்பற்றி கைப்பற்றுதல் மகசர் தயார் செய்தேன். **கைப்பற்றுதல் மகசர் அ.த.சா.ஆ 6 ஆக குறியீடு செய்யப்படுகிறது. அந்த கருநீலகலர் லப்பர் செருப்பு சா.பொ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** கைப்பற்றிய வழக்கு சொத்தை படிவம் 91 ன் மூலம் நீதிமன்றத்திற்கு அனுப்பிக்கொண்டேன். **படிவம் 91 அ.த.சா.ஆ 7 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**

பின்னர் சாட்சிகள் ராதா, அபிமன்னன், அன்பு மற்றும் பார்வை மகசர் மற்றும் கைப்பற்றுதல் மகசர் சாட்சிகள் ஆகியவர்களை தனித்தனியே விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். இவ்வழக்கில் எதிரிகளை தேடி வந்த நிலையில் 03.07.2017 ம் தேதி 12.15 மணிக்கு வெள்ளநாயக்கனேரி பஸ் நிறுத்தத்திடம் எதிரி கீதா, சின்னப்பாப்பா ஆகியோரை கைது செய்து கைது செய்யும் விவரத்தை கூறி நிலையம் கொண்டு வந்து தக்க நிலைய பதிவேடுகளில் பதிவு செய்து தக்க இரு நபர் நிலைய ஜாமினில் விடுவித்தேன். 05.07.2017 ம் தேதி வழக்கில் கண்ட எதிரி பாரிவள்ளல் என்பவரை பகல் சுமார் 01.30 வெள்ளநாயக்கனேரி எதிரி வீட்டிடம் கைது செய்து கைது செய்யும் விவரத்தை கூறி நிலையம் கொண்டு வந்து தக்க நிலைய பதிவேடுகளில் பதிவு செய்து தக்க இரு நபர் நிலைய ஜாமினில் விடுவித்தேன். 07.07.2017 ம் தேதி இவ்வழக்கில் காயம்பட்ட ராதா என்பவருக்கு சிகிச்சை அளித்த மருத்துவர் திரு. ராம்பாலாஜீ என்பவரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். அவர் அவர்களுக்கு சொற்பகாயம் என சான்று கொடுத்தார். ராதாவின் **விபத்து பதிவேட்டுடன் கூடிய காயச்சான்றிதழ் ஏற்கனவே அ.த.சா.ஆ 2 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது** . இத்துடன் எனது புலன் விசாரணையை முடித்து எதிரியின் மீது குற்றம் உண்மையென தெரியவந்ததால் எதிரியின் மீது 294(b),355,323 IPC படி இறுதி அறிக்கை தாக்கல் செய்தேன். எனது விசாரணையில் சாட்சிகள்

அனைவரும் பிரிவு 161(3) குவிமுச ன் படி வாக்குமூலத்தில் உள்ளதை போல் தான் சொன்னார்கள்.

எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை

இந்த வழக்கின் புகார்தாரர் தரப்பு மீது வழக்கின் எதிரிகள் ஒரு புகார் அளித்திருந்தார்கள் என்றால் சரிதான். அந்த வழக்கில் நீதிமன்றத்தின் மூலம் தீர்ப்பு பகிரப்பட்டு விடுதலை ஆகிவிட்டார்கள் என்றால் சரிதான். சம்பவம் நடந்த இடம் தனியாருக்கு சொந்தமான இடம் என்றால் சரிதான். அவர்களுக்குள் எதற்காக பிரச்சனை ஏற்பட்டது என்றால் வீடு சம்மந்தப்பட்ட பணம் கொடுக்கல் வாங்கல் பிரச்சனை. அக்ரீமண்ட் சம்மந்தமாக ஏதேனும் விசாரணை செய்து தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. அதைப்பற்றி விசாரித்திருந்தால் தான் அவர்களுக்குள் இருந்த பிரச்சனை பற்றி தெரியவந்திருக்கும் என்றால் சரிதான். வழக்கின் சொத்தை யாரிடம் இருந்து எங்கு கைப்பற்றினேன் என்றால் சாட்சி அன்பு என்பவர் எடுத்து வந்து ஆஜர்படுத்தினார். அவர் அதை எங்கிருந்து அதை கொண்டு வந்து ஆஜர் படுத்தினார் என்று மகசரில் உள்ளதா என்றால் இல்லை. எதிரிக்கு சொந்தமான இடத்தில் இருந்தோ, எதிரியிடம் இருந்தோ நாங்கள் வழக்கு சொத்தை கைப்பற்றவில்லை என்றால் சரிதான். படிவம் 91 ல் சாட்சிகளின் கையொப்பம், தேதி குறிப்பிடவில்லை என்றால் சரிதான். புகார் வாக்குமூலத்தில் உதைத்தார்கள் என்று கூறியுள்ள நிலையில் எந்த இடத்தில் உதைத்தார்கள் என்று குறிப்பிட்டு கூறவில்லை என்றால் சரிதான். மேற்படி எத்தனை வருடமாக வீடு, பணம் குறித்து கொடுக்கல் வாங்கல் சம்மந்தமாக பிரச்சனை உள்ளதாக குறிப்பிட்டு கூறியுள்ளார்களா என்றால் இல்லை. எதிரிகள் கொடுத்த புகாரில் இருந்து தப்பிப்பதற்காக தான் இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளார்கள் என்றால் சரிதான். அவர்களுக்கு இடையே உள்ள பிரச்சனையை தீர்த்துக்கொள்ளும் காழ்ப்புணர்ச்சிக்காக தான் இந்த புகாரை கொடுத்துள்ளார்கள் என்றால் சரியல்ல. இந்த வழக்கின் அரசு தரப்பு சாட்சிகள் எழுதாத வெள்ளை தாளில் போலிசார் கேட்டுக்கொண்டதற்கிணங்க தான் கையொப்பம் செய்தோம் என்று கூறியுள்ளார்கள் என்றால் சரியல்ல. இவ்வழக்கில் காயம்பட்ட நபருக்கு சிகிச்சை அளித்த மருத்துவரை விசாரிக்கவில்லை என்று மருத்துவர் அவரது சாட்சியத்தில் குறிப்பிட்டு கூறியுள்ளது தவறு. எதிரிகள் கொடுத்த வழக்கில் இருந்து தப்பிக்க வைப்பதற்காக அ.சா.1 சொன்ன சங்கதிகளை கொண்டு பொய்யான வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. நான்

சம்பவயிடம் செல்லவில்லை என்றாலும், சாட்சிகளை சரிவர விசாரிக்கவில்லை என்றாலும் வழக்கு ஆவணங்களான பார்வை மகசர் மற்றும் கைப்பற்றுதல் மகசர் மற்றும் சாட்சிகளின் வாக்குமூலங்களை காவல்நிலையத்தில் வைத்து தாயாரித்துக்கொண்டேன் என்றாலும் சரியல்ல. சம்பவமே நடைப்பெறவில்லை என்றாலும் எதிரிகளுக்கும் இவ்வழக்கிற்கும் இடையே எந்த சம்மந்தமும் இல்லை என்றால் சரியல்ல.

மறுவிசாரணை இல்லை.

சாட்சி கையொப்பம்
(ஓம்.) தேவராஜ்

SRIPATHI K

Digitally signed by SRIPATHI K
Date: 2026.02.05 19:06:28 +0530